<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

MCOP No: 238/2019

2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 26 நாள் **Pw**3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 26.06.2025

**Pw**3 (அர்த்தநாரீஸ்வரன்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் ஆஜராகி தாக்கல் செய்த மசாஆ 25 சம்பள பட்டியலில் ராஜாவுக்கு வழங்கப்பட்ட போக்குவரத்து அலவென்ஸ் சேர்க்காமல் விடுபட்டு போய்விட்டது. எனவே அந்த தொகை ஆன 1600 ரூபாய் சேர்த்து அவருடைய மொத்த சம்பளம் அடங்கிய ரிவைஸ்டு சம்பள பட்டியல் 2019 ஆம் ஆண்டு ஜனவரி பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கானது தற்போது தாக்கல் செய்கிறேன். அது **மசாஆ 27**. (மேற்படி ஆவணம் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) .மேற்படி ராஜா எங்கள் நிறுவனத்தில் நிரந்தர பணியாளராக பணிபுரிந்தார்.

**<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எல் அண்ட் டி நிறுவன மேனேஜருக்கு தான் வழங்கப்பட்டது என்றால் சரி. நான் தற்போது எந்த நிறுவனத்தில் இருந்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால்

LTIMindtree நிறுவனத்தில் இருந்து சாட்சி அளிக்க வந்துள்ளேன். L & T Infotech மற்றும் Mindtree நிறுவனங்கள் merge ஆகி விட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் வழங்கி தந்துள்ள கடிதத்தின் அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம் ,அது ஈமெயில் தான் வந்தது அதன் பிரிண்ட் அவுட் எடுத்து தாக்கல் செய்துள்ளேன். மாசாஆ 23 ஆவணம் நானாக தயாரித்துள்ளேன் என்றும் எனக்கு எல் அண்ட் டி நிறுவனத்தில் இருந்து எந்த அதிகாரமும் சாட்சியமளிக்க வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் நபர்களின் வருகை பதிவேடு பிராவிடண்ட் பண்ட் போன்ற ஆவணங்கள் நிறுவனத்தால் பராமரிக்கப்படுவது வழக்கம் என்றால் ஆமாம். இறந்து போன ராஜா எங்கள் நிறுவனத்தில் பணியாற்றிய போது அவருக்கு செலுத்தப்பட்டுள்ள பிராவிடண்ட் பண்ட் தொகை மற்றும் அவருக்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை ஆகியவற்றை பற்றிய பதிவேடுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், அந்த விபரங்கள் அவருடைய சம்பள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சம்பள பட்டியல்கள் கம்ப்யூட்டரில் இருந்து பிரிண்டர் எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி சம்பள பட்டியலில் சான்று எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, சீல் வைக்கப்பட்டுள்ளது.பொதுவாக கணினியில் இருந்து பிரின்ட் அவுட் எடுக்கப்படும் சம்பள பட்டியல்கள் மேனேஜரால் சான்று வழங்கப்படுவது வழக்கம் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் அவ்வாறு வழக்கமில்லை. நான் தாக்கல் செய்துள்ள சம்பள சான்றிதழ் உண்மையானவை அல்ல என்றும் வழக்கத்திற்காக நான் உற்பத்தி செய்த

இறந்தவரின் குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று போலியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தில் இருந்து நான் சாட்சியமளிக்க வரவில்லை என்றும் மனுதாரர் உற்பத்தி செய்த ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன் என்பதை காண்பிப்பதற்கு authorization லெட்டரை தவிர்த்த என்னுடைய அடையாள அட்டை எதுவும் ஆஜர் படுத்தவில்லை என்றால் சரியல்ல, நான் ஏற்கனவே என்னுடைய ஐடி கார்டு நகல் தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லி சாட்சி தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் இருந்து அடையாள அட்டை எடுத்து காண்பித்தார். நான் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அழைக்கிறேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 26.06.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS